தக்கர் குரல்

உள்ளது உள்ளபடி

TNBIL/25/A2396

மலர் 1 Volume-1 | இதழ் 4 Issue 4 | ஜனவரி 2026 January 2026 | மாத இதழ் Monthly Magazine | விலை ரூ.25 Price RS.25





## ‘ரவுடியிஸத்துக்கு சமூகமே பொறுப்பு’

- நேர்காணல்



## பாம்பை ஏவி தந்தை கொலை

-பின்னணி



## பித்தப்பை கல்

அதிகரிக்கும் ஆபத்து



# பொறுப்பு டிஜிபி தொடர்வது நல்லதா?

எங்கள் சங்கத்தின் அன்பு வேண்டுகோளை ஏற்று...
பொன்விழா மலர் - வெளியீட்டு விழாப் பேருரை ஆற்றி
கூடுதல் பெருமை சேர்த்த...

# நமது "தாய் உள்ளம் கொண்ட"
# மாண்புமிகு துணை முதலமைச்சர்
# உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு

## மனமார்ந்த நன்றி.! நன்றி.!! நன்றி.!!!



சரித்திர - சாதனைகள் பல படைத்திடும்...

# திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்கம்

தக்கார் குரல்

<u>வெளியீட்டாளர் - ஆசிரியர்</u>
**S.யூசுப் பாஷா**

வழிகாட்டுதல் குழு
**ஜோதிமணி,** மேனாள் நீதியரசர் உயர் நீதிமன்றம்
**ராஜதுரை**, மூத்த பத்திரிகையாளர்
**கே.ராஜேந்திர பிரபு,** மூத்த பத்திரிகையாளர்
**ஆஷிஸ்**, சட்ட ஆலோசகர்

பொறுப்பாசிரியர் **S.சஞ்சய்காந்தி**
உதவி ஆசிரியர்கள்
**G.சதீஸ்குமார், S.சக்தி பாரதி**

<u>சென்னை நிருபர்கள்</u>
தலைமை நிருபர்
**பாலாஜி**

<u>மாவட்ட நிருபர்கள்</u>
சென்னை - **M.ஹர்ஷத்**
சென்னை - **அருள்ஜோதி**
உயர் நீதிமன்றம் **க.முகேஷ்**

<u>மாவட்ட செய்தியாளர்கள்</u>
புதுச்சேரி - **ஏ.கே.ஆர்**
காஞ்சிபுரம்- **கவி பாலா,**
**ராஜா** புகைப்படக்கலைஞர்
இராணிப்பேட்டை - **ராஜீவ்**
கடலூர் - **பாரி**
திருவள்ளூர் **சுரேஷ் பாபு**
மதுரை - **கோபி கிருஷ்ணன்**
கொடைக்கானல் - **கணேசன்**
திருச்சி - **புவனேஸ்வரி**
காரைக்குடி - **விஜயலட்சுமி**
கோவை - **அருண் சங்கீத்**
ராமநாதபுரம் - **கவின்**
போடி - **விஜய்**
கடலூர் - **பாரி**
இணையதள ஆசிரியர்- **தீப்நாத்**
விஷூவல் எடிட்டர் - **E.காலித்**
டிஜிட்டல் மார்க்கெட்டிங் - **யுகேந்திரன்**
வடிவமைப்பு
**பாரதி டிசைனர்ஸ்,** மதுரை

மின்னஞ்சல்
thakkaarkural@gmail.com
Cell: 75500 50088
செய்திகளை உடனுக்குடன் அறிய உங்கள் போனில்
ThakkaarKural App-ஐ டவுன்லோடு செய்யுங்கள்
இணையதள முகவரி
www.thakkaarkural.com


# தை பிறந்தால் வழிபிறக்கும்..!

வாசகர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். பெரும் எதிர்பார்ப்புகளுக்கிடையே பிறந்துள்ளது 2026 ஆங்கிலப் புத்தாண்டு. தக்கார் குரல் மாத இதழ் தொடங்கப்பட்டு நாம் கொண்டாடும் முதல் புத்தாண்டு இது என்பது சிறப்புக்குரியது.

எஸ்ஐஆர் பணிகள் முடிந்து வரைவு வாக்காளர் பட்டியல் டிச.19ம் தேதி வெளியிடப்பட்டது. சுமார் 97 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. விடுபட்டவர்கள் தங்கள் பெயரை சேர்த்துக் கொள்ளவும், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ளவும் ஒருமாத கால அவகாசம் (ஜன.18 வரை) வழங்கப்பட்டுள்ளது. இந்த கால அவகாசம் முடியும் தருவாயில் தை பிறக்கிறது. இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.17ம் தேதி வெளியாகும்.

சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு இந்த பணிகள் மும்முரமாக நடைபெற்று வரும் வேளையில், மறுபுறம் கட்சிகளின் அரசியல் நகர்வுகளும் பரபரப்பாக அரங்கேறி வருகின்றன. அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் உள்ள பாஜகவின் தேர்தல் மேலிட பொறுப்பாளர் பியூஸ் கோயல், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து முதல்கட்ட பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ளார்.

திமுக கூட்டணியில் வெளிப்படையாக அத்தகைய பேச்சுவார்த்தைகளை இதுவரை தொடங்கவில்லை என்றாலும், திரைமறைவில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. தொகுதி எண்ணிக்கையை அதிகரிக்க, ஆட்சியில் பங்கு கோரும் உத்தியை கடைபிடிக்கிறது காங்கிரஸ். அதன் தமிழக பொறுப்பாளரும், பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவருமான கிரிஷ் சோடங்கர் இதை வலியுறுத்தி பேசுகிறார்.

மறுபுறம், கூட்டணி ஆட்சிக்கு தயார் என்று அழைத்தும் தவெக தலைவர் விஜயுடன் சேர ஒரு கட்சியும் முன்வராதது வினோதம். இதுவே யார், யாருக்கு இடையே போட்டி நிலவுகிறது என்பதை எடுத்துரைக்கும் அம்சமாக அமைகிறது. கூட்டணியை சிறதவிடாமல் இதே வடிவத்தில் தக்க வைக்குமா திமுக?, பிளவுபட்ட பாமக ஒன்றுபடுமா?, பாமகவின் இரு பிரிவுகளும், தேமுதிகவும் எந்த பக்கம் சாயும்? ஆகிய கேள்விகளுக்கு தை மாதத்தில்தான் விடை கிடைக்கும். காரணம், பொங்கல் திருநாளைக் கொண்டாட பிரதமர் மோடி தமிழகம் வர உள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அப்போது கூட்டணியை முறைப்படி இறுதி செய்து அனைத்து தலைவர்களையும் மேடை ஏற்ற திட்டமிடுகிறது பாஜக.

ஆக, தைப்பிறந்தால் வழிபிறக்கும் என்பது நடப்பாண்டில் அரசியல் கட்சிகளுக்கு பொருத்தமானதாக அமைந்துள்ளது. அதுபோலவே தமிழக மக்களுக்கும் வழிபிறக்கட்டும் என்பதே நமது விருப்பமும் கூட..

– ஆசிரியர்

# திருப்பரங்குன்றம் தீபத்தூண் வழக்கு

## சமரசம் சாத்தியம்தானா?



தமிழ்க் கடவுள் முருகருக்கு உகந்த கார்த்திகை மாதத்தில் முதலாம் படைவீடான திருப்பரங்குன்றம் மலையின் உச்சியில் கார்த்திகை தீபத்தை ஏற்ற அனுமதி வழங்கப்பட்டது. எனினும், கடந்த ஆண்டு (2025) மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் ஏற்றாமல், உச்சி பிள்ளையார் கோவில் தீப மண்டபத்தில் கார்த்திகை தீபத்தை ஏற்றும் அரசின் முடிவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் இராம ரவிக்குமார் என்பவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

தீபத்தூணில் தீபம் ஏற்றவும், உச்சிப் பிள்ளையார் கோவில் தீப மண்டபத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பான அறிவிப்பை ரத்து செய்யவும் உத்தரவிட வேண்டும் என்ற







கோரிக்கையுடன் தொடரப்பட்ட வழக்கை நீதிபதி G.R.சுவாமிநாதன் விசாரித்தார். இந்து சமய அறநிலையத் துறை தரப்பில், 'தேவையற்ற பிரச்சனைகளை தவிர்ப்பதற்காகவே தீபத்தூணில் தீபம் ஏற்ற திட்டமிடப்படவில்லை' என விளக்கம் அளிக்கப்பட்டது. அப்போது, "யாரை கண்டு பயப்படுகிறீர்கள்?" என கேள்வி எழுப்பிய நீதிபதி, சிக்கந்தர் தர்கா நிர்வாகம், வக்ஃப் வாரியம், தொல்லியல்துறை ஆகியவற்றை எதிர்மனுதாரர்களாக சேர்த்து உத்தரவிட்டார்.

6ம் நூற்றாண்டில் இருந்து தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டதாக மனுதாரர் தரப்பு கூறிய நிலையில், 'குறிப்பிட்ட இடத்தில்தான் தீபத்தை ஏற்ற வேண்டும் என எப்படி கோர முடியும்? 100 ஆண்டுகளுக்கும் மேலாக வழக்கத்தில் இல்லாததை உரிமையாக எப்படி கோரமுடியும்?' என அரசு தரப்பு கேள்வி எழுப்பியது. "மலை மீது என்றுதானே பழைய உத்தரவில் கூறப்பட்டுள்ளது?" என்ற நீதிபதியின் கேள்விக்கு, "உச்சிப்பிள்ளையார் கோவிலும் மலை மீதே உள்ளது" என அரசு தரப்பு பதிலளித்தது. சமூக நல்லிணக்க நோக்கில் பார்க்க வேண்டும் என அரசு கூறியபோது, அதை கடைபிடிப்பது உங்கள் கையில்தான் உள்ளது என நீதிபதி அறிவுறுத்தினார். பின்னர் நீதிபதி திருப்பரங்குன்றம் மலைக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார்.

1920களில் அந்த நிலம் தர்காவிற்கு ஒதுக்கப்பட்டதாகவும், திருப்பரங்குன்றம் மலையின் உச்சியும் தர்காவை சேர்ந்ததே என்பதை உரிமையியல் நீதிமன்ற உத்தரவு உறுதி செய்துள்ளதாகவும் சிக்கந்தர் தர்கா தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. இதற்கிடையே வக்ஃப் வாரியம் தரப்பில், 'தீபம் ஏற்றும் இடத்தை மாற்ற வேண்டும் என கோரினால் உரிமையியல் நீதிமன்றத்தையே அணுகலாம். கோவில் மற்றும் தர்கா நிர்வாகம் இணைந்து பேசி முடிவெடுப்பதே ஏற்றது. இந்து இஸ்லாமிய சகோதரர்களின் மத நம்பிக்கை பாதுகாக்கப்பட வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டது.

திருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபத்தை ஏற்ற அனுமதிக்க வேண்டும் என்றே கோரிக்கை மனு வரப்பெற்றதாகவும், அந்த மனுவில் எந்த இடத்தையும் குறிப்பிட்டு கேட்காத நிலையில், இந்த வழக்கின் மனுவில் மட்டும் தீபத்தூணில் ஏற்ற வேண்டும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. 1994ல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் பழமையான இடமான உச்சிப்பிள்ளையார் கோவில் அருகிலேயே தீபத்தை ஏற்ற வேண்டும் என்ற உத்தரவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தீபத்தூண் மூடப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் கூறியபோது, யார் அதை மூடியது? என நீதிபதி கேள்வி எழுப்பினார். அதற்கு, கோவில் நிர்வாகம்தான் தீபத்தூணை மூடிவைத்ததாக தெரிவிக்கப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி சுவாமிநாதன், தர்கா அருகில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டுமென உத்தரவிட்டார்.

கார்த்திகை தீபத்தன்று மாலையில், உச்சி பிள்ளையார் கோவில் தீப மண்டபத்தில் தீபம்



ஏற்றப்பட்டது. தீபத்தூணில் தீபம் ஏற்றப்படவில்லை. இதையடுத்து, இந்து அமைப்பினர் அங்கு செல்ல முயன்றனர். அப்போது, அவர்களுக்கும் போலீஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதற்கிடையே, நீதிமன்ற உத்தரவுக்கு பிறகும் தீபத்தூணில் தீபம் ஏற்றப்படவில்லை என கூறி, நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக் கோரிய வழக்கை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி, திருப்பரங்குன்றம் கோவிலின் செயல் அலுவலர் மற்றும் மதுரை மாநகர காவல் ஆணையர் ஆகியோரை ஆஜராக உத்தரவிட்டார்.

கூட்டம் அதிகமாகி தள்ளுமுள்ளு ஏற்பட்டு, தகராறு நடந்ததாலேயே பொதுமக்களின் நலன் கருதி 144 தடை உத்தரவை மாவட்ட ஆட்சியர் பிறப்பித்தாகவும், நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தக் கூடாது என்ற நோக்கம் ஏதும் இல்லை என்றும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**தர்கா அருகே உள்ள தூணில் தீபமேற்ற அனுமதி வழங்கப்பட்டால், சட்டம் ஒழுங்கு பிரச்சினை உருவாகும். 1923ம் ஆண்டு நீதிமன்றம் அந்த அமைப்பை தீபத்தூண் என ஏற்றுக் கொள்ளவில்லை. புதிய பழக்கமாக தூணில் தீபமேற்ற பாதுகாப்பு வழங்க உத்தரவிடுவது ஏற்கத்தக்கதல்ல என்றும் வாதிடப்பட்டது.**

அதன் பின்னர், மனுதாரர் உள்ளிட்ட 10 நபர்கள் திருப்பரங்குன்றம் மலை உச்சிக்கு சென்று தீபத் தூணில் தீபம் ஏற்றவும், அவர்களுக்கு உயர் நீதிமன்றத்துக்கு பாதுகாப்பு வழங்கி வரும் மத்திய தொழிலக பாதுகாப்பு படையினரின் (CISF) பாதுகாப்பை அளிக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

மனுதாரர் உள்ளிட்டோருக்கு பாதுகாப்பு அளித்து மலை மேலே செல்ல முயன்றபோது, 144 தடை உத்தரவு அமலில் இருப்பதாக கூறி மதுரை காவல் ஆணையர் தடுத்ததால் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற இயலாது என்று CISF தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

“தீபம் ஏற்றுவது தொடர்பான உத்தரவு மற்றும் அதை நிறைவேற்றாததால் தொடரப்பட்ட அவமதிப்பு வழக்கில்



பிறப்பித்த உத்தரவு ஆகிய இரண்டையும் நிறைவேற்றவில்லை. இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளிலும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கவில்லை. இந்த நிலையில் எப்படி உத்தரவை நிறைவேற்றாமல் இருக்கலாம்?” என மனுதாரர் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு அரசு தரப்பில், ‘தீபம் ஏற்றும் 4 நாட்களும் முடிவடைந்துவிட்டன. கோயில்களில் இதைச் செய்ய வேண்டும், இதைச் செய்யக் கூடாது என நீதிமன்றம் உட்பட யாரும் சொல்ல முடியாது. தேவஸ்தானமே அது குறித்து முடிவு செய்ய இயலும்’ எனவாதிடப்பட்டது. சட்ட ஒழுங்கு பிரச்சினை எழும் என்றால் அதைத்தான் முதலில் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், அத்தகைய சூழலில் நீதிமன்றத்தைக் காரணம் காட்ட இயலாது, அரசே பொறுப்பேற்க வேண்டியிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.



அடுத்த முறை விசாரணைக்கு வரும்போது இடைக்கால உத்தரவு பெறப்படவில்லை எனில் அப்போதும் வழக்கை தள்ளிவைக்க இயலாது என நீதிபதி தெரிவித்தார். அப்போது, ‘தனி நீதிபதியின் உத்தரவு சரியா? இல்லையா? என்பதற்காகத்தான் மேல்முறையீட்டு வழக்கே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டு வழக்கு முடிவிற்காக காத்திருக்க வேண்டும்’ என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## மேல்முறையீடு மீது விசாரணை

இதைத் தொடர்ந்து தீபத்தூண் விவகாரம் தொடர்பான மேல்முறையீடு வழக்குகள் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில், சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னர் இரு சமூகங்களிடையே பதற்றமான சூழல் உருவானது. சட்டம்ஜூ ஒழுங்கை கருத்தில் கொண்டே காவல்துறை செயல்பட்டு வருகிறது’ என தெரிவிக்கப்பட்டது.

தர்கா அருகே உள்ள தூணில் தீபமேற்ற அனுமதி வழங்கப்பட்டால், சட்டம் ஒழுங்கு பிரச்சினை உருவாகும். 1923ம் ஆண்டு நீதிமன்றம் அந்த அமைப்பை தீபத்தூண் என ஏற்றுக்கொள்ளவில்லை. புதிய பழக்கமாக தூணில் தீபமேற்ற பாதுகாப்பு வழங்க உத்தரவிடுவது ஏற்கத்தக்கதல்ல என்றும் வாதிடப்பட்டது.

பின்னர் நிதிபதிகள் கார்த்திகை மாத தீப திருவிழா முடிந்து மார்கழி மாதம் தொடங்கியுள்ள நிலையில் மேல்முறையீடு வழக்கை அவசரமாக விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், தற்போதைய நிலையில் எந்த இடைக்கால உத்தரவும் பிறப்பிக்க முடியாது என்றும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

திருப்பரங்குன்றம் கோவில் மற்றும் சிக்கந்தர் தர்கா நிர்வாகங்களிடையே சமரச பேச்சுவார்த்தை நடத்த இயலுமா? நல்லிணக்கத்தை ஏற்படுத்த நீதிமன்றம் முயற்சி எடுக்கலாமா? என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பி வழக்கை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தனர்.

தீபத்தூணை சமணர் தூண், சர்வே தூண் என்று தமிழக அரசு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. தீபத்தூண் எங்களுக்கே சொந்தம் என்று தர்கா தரப்பும் தெரிவித்துள்ளது. ஆக, தீபத்தூணில் தீபமேற்றும் உரிமை பற்றிய வழக்கு, தீபத்தூண் பற்றிய வழக்காக உருமாறி வருகிறது. இனி வரும் காலங்களில் வழக்கின்போக்கு எப்படியெல்லாம் மாறுகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டி உள்ளது. வழக்கின் தற்போதைய போக்கை கவனிக்கும்போது, நீதிமன்றத்துக்கு அப்பால் சமரச பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

**க.முகேஷ்,** சென்னை

# லட்சக்கணக்கானோர் தரிசித்த
# ஸ்ரீரங்கம் சொர்க்கவாசல் திறப்பு

மார்கழி மாதம் என்றாலே பக்தி, புனிதம் ஆகியவற்றை நினைவூட்டும் ஒரு மாதமாகும். இம்மாதம் முழுவதுமே நாம் கடவுளுக்காக அர்ப்பணிக்கும் ஒரு மாதமாக கருதப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த மாதத்தில் வரும் மிகச் சிறப்பான திருநாள் தான் வைகுண்ட ஏகாதசி. இந்த திருவிழா குறிப்பாக திருச்சி ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலயத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெறும். இந்த வகையில் இந்த விழா கடந்த செவ்வாய்க்கிழமை (டிச.30) வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது.

இந்த நாள் வைகுண்டத்தின் கதவுகள் மனிதர்களுக்காக திறக்கப்படும் நாளாக போற்றப்படுகிறது. மேலும் இந்த நாளில் விரதம் இருந்து பக்தியுடன் வழிபடுபவர்கள் பாவங்களில் இருந்து விடுபட்டு முக்தி பெறுவார்கள் என்பது பக்தர்களின் ஒரு நம்பிக்கை.


அந்த வகையில் ஆண்டுதோறும் ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோவிலில் ‘பரமபத வாசல்’ திறப்பு நிகழ்ச்சி நடைபெறும். இந்த திருவிழா பரமபத வாசல் திறப்பு நிகழ்ச்சிக்கு முன் பத்து நாள், பின் பத்து நாள் என மொத்தம் 21 நாள் கொண்டாடப்படுவதுண்டு. அதைத்தான் நாம் ‘பகல்பத்து, ‘இராப்பத்து’ என அழைக்கிறோம். இதில் பகல்பத்து என்பது வைகுண்ட ஏகாதசிக்கு முந்தைய 10 நாட்களைக் குறிக்கும்.

இந்த ஆண்டுக்கான விழா கடந்த 19ம் தேதி திருநெடுந்தாண்டகத்துடன் தொடங்கியது. பகல் பத்து நாட்களில் ஸ்ரீரங்கம் கோவிலில் நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் முக்கியமான திருவாய்மொழி உள்ளிட்ட பாசுரங்கள் சேவிக்கப்பட்டு வருகின்றன. பகல்பத்து சேவை நாட்களில் ஸ்ரீரங்கநாதர் பல்வேறு அலங்காரங்களில் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். உதாரணமாக,

வைகுண்ட ஏகாதசி பகல்பத்து 7ம் நாளில் நம்பெருமாள் மற்றும் ஆண்டாள் முத்துக்கொண்டை அணிந்து, வைரக்கல் திருவாபரணங்கள் சூடி காட்சியளித்தனர். மூலஸ்தானத்தில் இருந்து தங்கப்பல்லக்கில் பிரகாரங்களில் வலம் வந்து அர்ஜுனமண்டபத்தில் பன்னிரு ஆழ்வார்கள் முன்னிலையில் எழுந்தருளிய நம்பெருமாளை, திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

கடந்த 27ம் தேதி பகல் பத்து 8ம் நாள் நிகழ்வில்







**நா.புவனேஸ்வரி**, திருச்சி

உற்சவர் நம்பெருமாள் ரத்தின பாண்டியன் கொண்டை, மாந்துளிர் வர்ணப் பட்டு, ஸ்ரீ மகாலட்சுமி பதக்கம், அழகிய மணவாளன் பதக்கம் உள்ளிட்ட திருஆபரணங்களை அணிந்து எழுந்தருளினார்.

பகல்பத்து முடிந்து கடந்த செவ்வாய்க்கிழமை (டிச.30) வைகுண்ட வாசல் திறக்கப்பட்டது. லட்சக்கணக்கான பக்தர்கள் ரங்கா, ரங்கா என பக்தி பரவசத்தில் முழக்கமிட்டனர். பரமபத வாசல் திறப்பு விழாவைக் கண்டு தரிசிக்க, தமிழ்நாடு மட்டுமின்றி, நாடு முழுவதும் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கானோர் ஸ்ரீரங்கம் வருகை தந்தனர். ஆண்டுக்கு ஆண்டு இங்கு வைகுண்ட ஏகாதசிக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.








சொர்க்கவாசல் திறப்புக்கு அடுத்த நாளிலிருந்து இராப் பத்து தொடங்கியது. வைகுண்ட ஏகாதசிக்கு பிந்தைய இந்த 10 நாட்களில் ஸ்ரீரங்கநாதர் உற்சவர் வடிவில் பல மண்டபங்களிலும் எழுந்தருளி அருள் பாலிக்கிறார். இந்த விழாவின் இறுதியில் திருநாள் சாற்றுமுறை நடைபெறும். இந்த விழா வருகிற ஜனவரி 9ந்தேதி நம்மாழ்வார் மோட்சத்துடன் நிறைவு பெறுகிறது.

இவ்வாறு பல கட்டங்களாக நடைபெற்று வரும் இந்த விழாவை முன்னிட்டு, திருச்சி ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி திருக்கோவில் முழுவதுமே விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது.



இன்றைய அவசரமான வாழ்க்கை முறையில் மனிதன் மன அமைதியையும் ஆன்மீக சமநிலையையும் இழந்து வருகிறான். வைகுண்ட ஏகாதசி போன்ற திருநாள்கள் மனிதன் தன் உள்ளத்தை நிலைநிறுத்தி, இறை அருளை உணரச் செய்யும் ஒரு வாய்ப்பாக அமைகின்றன. பரமபத வாசல் என்பது கோவிலில் மட்டும் திறக்கப்படும் ஒரு கதவாக அல்லாமல் மனித மனதில் திறக்க வேண்டிய ஆன்மீக வாசலாகவும் அமைந்தால் நிம்மதியான வாழ்க்கை அனைவருக்கும் அமையும்.

# 4 மாதம் ஆகியும் 'பொறுப்பு டிஜிபி' தொடர்வது நல்லதா?



தமிழ்நாட்டின் டிஜிபி ஆக இருந்த சங்கர் ஜிவால் கடந்த ஆகஸ்ட் மாதம் 31ம் தேதி ஓய்வு பெற்றார். அப்போது பொறுப்பு டிஜிபியாக பதவியேற்றார், வெங்கட்ராமன். அவரைவிட சீனியாரிட்டி ஐபிஎஸ் அதிகாரிகள் தமிழ்நாட்டில் பலர் இருந்தாலும், 2 வருடம் பதவி காலம் கொண்ட டிஜிபி நியமிக்கப்படவில்லை.

சீனியாரிட்டி அடிப்படையில் மத்திய தேர்வு ஆணையக் குழு பரிந்துரைக்கும் மூவரில் ஒருவரை தமிழ்நாடு அரசு தேர்வு செய்து இப்பதவியில் அமர்த்த வேண்டும். இது நடைமுறை. இந்த அடிப்படையில் புதிய டிஜிபி தேர்வு நடைபெறாததற்கு தமிழ்நாடு அரசின் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்த கருத்து என்னவென்றால், 'தன்னாட்சி அமைப்பான மத்திய தேர்வு ஆணையத்தை சுயமாக செயல்படவிடாமல், தான் நினைத்ததை அந்த அமைப்பின் வாயிலாக மத்திய அரசு சாதிக்க முற்படுகிறது. இது ஜனநாயகத்துக்கும் கூட்டாட்சி தத்துவத்துக்கும் எதிரானது. உச்ச நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் இது தொடர்பாக, எங்களுடைய நியாயத்தை தெரிவித்துள்ளோம். உரிய நேரத்தில் சரியான நடவடிக்கை எடுப்போம்' என்றார்.

ஒரு மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை கவனிக்கும் டிஜிபி தான், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை கவனிக்கும் அனைத்து போலீஸ் அதிகாரிகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டவர் ஆவார். நாடு சுதந்திரம் அடைந்து சுமார் 25 ஆண்டுகள் வரை அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் பெரும்பாலும் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருந்தனர். அடுத்த தலைமுறை நலனுக்காக திட்டம் வகுத்து செயல்பட்டனர். அவர்கள் போலீஸ் அதிகாரிகளை சுயமாக செயல்பட அனுமதித்தனர். நாளடைவில், அரசியல்வாதிகள் ஆட்சியாளர்களின் செயல்பாடு மாறியது.

“அடுத்த தலைமுறை நலன்” என்ற முக்கிய நோக்கம் “அடுத்த தேர்தலில் வெற்றி” என்ற நிலைக்கு மாறியது. இந்தத் தீய நோக்கம் முதன்மைக்கு வந்ததும் சகல மட்டங்களிலும் ஊழல் தலைதூக்கத் தொடங்கியது. குவித்திடும் லஞ்சப் பணத்தை தேர்தல் வெற்றிக்குப் பயன்படுத்தத் தொடங்கினர். இது இந்தியாவில் கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களிலும் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் 2006-2011 திமுக ஆட்சியின்போது, நடைபெற்ற திருமங்கலம் இடைத்தேர்தலில் ஓட்டுக்காக பெருமளவு பணப்பட்டுவாடா செய்யப்பட்டது. அதற்கு முந்தைய அதிமுக ஆட்சியிலும் பணப்பட்டுவாடா நடைபெற்ற போதிலும், அதிமுக கோட்டையான திருமங்கலத்தை பணப்பட்டு வாடா மற்றும்


தமிழ்நாடு டிஜிபி அலுவலகம்

அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல் மூலம் திமுக கைப்பற்றியதால் இதற்குத் "திருமங்கலம் ஃபார்முலா" என்ற பெயர் கிடைத்தது.

இப்போது வரை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதபடிக்கு இடைத்தேர்தலில் இந்த அணுகுமுறையைதான் ஆளுங்கட்சியினர் பின்பற்றி வருகின்றனர். காவல்துறையின் பரிபூரண ஒத்துழைப்பு இல்லாமல் இதை செயல்படுத்த முடியாது.

இடைத்தேர்தலில் தொடங்கிய பணப்பட்டுவாடா படிப்படியாக தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் பின்பற்றப்பட்டு வந்தது. "பணப்பட்டுவாடா" என்ற சட்ட விரோத செயல் ஒரு பகல் கொள்ளைக்கு சமம். மக்களின் தன்மானத்தைப் பறிக்கும் செயல். பொது மக்களின் விழிப்புணர்வு மட்டுமே இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

வருகிற ஏப்ரல் மாதம் தமிழ்நாட்டின் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இன்னும் 3 மாதங்களே உள்ள நிலையில் தேர்தல் ஆயத்த வேலைகளில் ஆளுங்கட்சியான திமுகவும் அதன் கூட்டணி கட்சிகளும் எதிர்க்கட்சியான அதிமுகவும் அதன் தோழமை கட்சிகளும் மும்முரமாக உள்ளன. அதிமுக கூட்டணியில் உள்ள பாரதிய ஜனதா கட்சி மத்தியில் ஆட்சி செய்கிறது. தேர்தல் ஆணையம் உள்ளிட்ட அனைத்து மத்திய தன்னாட்சி அமைப்புகளையும் தன்னுடைய ஏவல் அமைப்புகளாக மாற்றிவிட்டதாக எதிர்க்கட்சிகளின் கடுமையான குற்றச்சாட்டை பாஜக சுமந்து நிற்கிறது. இதற்குச் சான்றாக அமலாக்கத்துறையின் நடவடிக்கையையும், தேர்தல் ஆணையத்தின் சமீப காலத்திய செயல்பாடுகளையும் எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன.

தமிழ்நாட்டில் தேர்தல் வெற்றிக் கனியை பறிப்பதற்காக திமுக கூட்டணியும் பாஜக உள்ளிட்ட கட்சிகள் துணையுடன் நிற்கும் அதிமுகவும் மல்லுக்கட்டி நிற்கின்றன. கூடவே நடிகர் விஜய்ன் தவெகவும் களத்தில் உள்ளது. தேர்தல் காலத்தில் விநியோகிக்கப்பட வேண்டிய பணமும் பரிசு பொருட்களும் 234 தொகுதிகளிலும் பதுக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. இந்த 2 அணிகளுமே தங்கள் சக்திக்கு ஏற்ப இந்த வேலைகளை செய்து வருவதாக தெரிகிறது. தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்கு சட்டம் ஒழுங்கு நிர்வாகம் வருவதற்கு முன்பு சட்ட விரோத செயல்கள் அனைத்தையும் முடித்துவிட முக்கிய கட்சிகள் தீவிரமாக உள்ளன.

இத்தகைய சூழலில், பொறுப்பு டிஜிபி 4 மாதத்திற்கும் மேலாக தொடர்வதற்கு முக்கியக் காரணம் மத்திய, மாநில அரசுகளின் அதிகாரப் போட்டிதான். ஐபிஎஸ் முடித்து, தமிழ்நாட்டுக் காவல்துறையில் அதிகாரியாக பதவி ஏற்கும் ஒருவரின் கனவுபதவி, சட்டம் ஒழுங்கு டிஜிபியாக ஆக வேண்டும் என்பதாகத்தான் இருக்கும். நியாயமான அந்தக் கனவில் மண்ணை போடும் வகையில், மத்திய மாநில அரசுகள் செயல்படுகின்றன.

சட்டம் ஒழுங்கு டிஜிபிக்கான தேர்வு சீனியாரிட்டி அடிப்படையில் தடையின்றி நடைபெற வேண்டும். அதைவிடுத்து, பொறுப்பு டிஜிபிகளை நியமித்து நீண்ட காலம் செயல்பட அனுமதிப்பது சட்டத்துக்கும் ஜனநாயகத்துக்கும் மக்கள் நலனுக்கும் நல்லதல்ல.!

# பாம்பை கடிக்க வைத்து தந்தையை கொன்ற மகன்கள்

## ரூ.3 கோடி காப்பீட்டு தொகைக்காக கொடூரம்

ரூ.3 கோடி காப்பீட்டு தொகையை பெறுவதற்காக, தந்தையை பாம்பு கடிக்க வைத்துக் கொலை செய்த 2 மகன்கள் உள்ளிட்ட 6 பேரை போலீஸார் கைது செய்தனர்.

திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டை நல்ல தண்ணீர் குளம் தெருவைச் சேர்ந்தவர் கணேசன்(56) அவர் அங்குள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வக உதவியாளராக பணியாற்றி வந்தார். அவருக்கு மோகன்ராஜ்(29), ஹரிஹரன்(26) என்ற 2 மகன்கள் உள்ளனர். மகன்கள் இருவருக்கும் திருமணம் முடிந்து ஒரே வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகின்றனர்.

இதில் மூத்த மகன் மோகன்ராஜ் தனியார் நிறுவனத்தில் செய்து வந்து வேலையை விட்டு விட்டு சொந்த ஊரில் நெசவுத்தொழில் செய்து வந்துள்ளார். இளைய மகன் ஹரிஹரன் கார் டிரைவர் வேலை செய்து வந்தார். கடந்த 3 மாதங்களுக்கு முன்பு வாகன விபத்தில் காயம் அடைந்த கணேசன்,








மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து வீட்டில் ஓய்வெடுத்து வந்தார். இந்நிலையில் அக்.22ம் தேதி நள்ளிரவு வீட்டில் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த கணேசனை கட்டுவிரியன் பாம்பு கடித்துள்ளது.

கணேசனை அவரது மகன்கள் மீட்டு பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் பாம்பு கடித்ததில் கணேசன் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். சம்பவம் குறித்து, கணேசன் மகன் மோகன்ராஜ் அளித்த புகாரின் பேரில் பொதட்டூர்பேட்டை போலீஸார் வழக்கு பதிவு செய்தனர்.

குடும்பத்தில் உள்ள அனைவர் மீதும் 11 காப்பீடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், கணேசன் மீது மட்டும் கடந்த 6 மாதங்களில் ரூ.3 கோடி அளவுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளியில் சாதாரண ஆய்வாக உதவியாளராக பணியாற்றி வந்த அவர் மீது ரூ.3 கோடிக்கு காப்பீடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. காப்பீடு செய்யப்பட்டவர் இயற்கை மரணம் அடைந்தால், அவரது குடும்பத்துக்கு பெருந்தொகை வழங்க வேண்டும்.

இந்த சம்பவத்தில் சந்தேகம் அடைந்த காப்பீட்டு நிறுவனத்தினர், இதுகுறித்து வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க்கிடம் புகார் செய்திருந்தனர். ஐஜி உத்தரவின் பேரில் திருவள்ளூர் மாவட்ட எஸ்பி

விவேகானந்தா சுக்லா நடவடிக்கை எடுத்தார். டிஎஸ்பி ஜெயஸ்ரீ, காவல் ஆய்வாளர்கள் தங்கதுரை, கஸ்தூரி, உதவி ஆய்வாளர்கள் முரளி, மாரிமுத்து ஆகியோர் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டு இந்த வழக்கை புலன் விசாரணை செய்தனர்.




கணேசன் இறந்தால், தங்களுக்கு காப்பீட்டுத் தொகை மற்றும் அரசு வேலை கிடைக்கும், அதோடு நிம்மதியான வாழ்க்கை வாழலாம் என்று கணேசனின் 2 மகன்களும் நினைத்தனர். அதற்காக திட்டமிட்டு, யாருக்கும் சந்தேகம் வராத வகையில் பாம்பு கடித்து இறந்ததாக நம்ப வைக்க திட்டம் தீட்டினர். இதற்காக கணேசனின் மூத்த மகன் மோகன்ராஜ், அவரது நண்பரான திருவாலங்காடு அருகே மணவூர் அம்பேத்கர் நகரை சேர்ந்த பாலாஜி(28) என்பவரிடம் உதவி கேட்டுள்ளார்.





பாலாஜி மற்றும் அவரது உறவினர் நவீன் குமார் ஆகியோர் இருளர் இனப் பெண்ணை திருமணம் செய்துள்ள மணவூரைச் சேர்ந்த பிரசாந்த்(35) என்பவரை அணுகியுள்ளனர். மேலும், பிரசாந்த்தின் மாமனாரான தினகரனுக்கு பணத்தாசை காட்டி, மணவூர் பகுதியில் உள்ள காட்டில் கட்டுவிரியன் பாம்பை பிடித்து சாக்குப்பையில் அடைத்து, அதை காரில் கொண்டு வந்துள்ளனர். பொதட்டூர் பேட்டையில் உள்ள வீட்டிற்கு சென்று, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த கணேசனின் கழுத்துப் பகுதியில் பாம்பை 3 முறை கடிக்க வைத்துள்ளனர். சிறிது நேரத்தில் கணேசன் இறந்ததை உறுதிசெய்து கொண்டு, கட்டுவிரியன் பாம்பை அடித்துக் கொன்று அதே இடத்தில் போட்டுள்ளனர். மேலும், தங்கள் தந்தையை பாம்பு கடித்துள்ளதாக கூறி 2 மகன்களும் அங்குள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று நாடகமாடியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, பாம்பு கடித்து தந்தை இறந்துவிட்டதால், அவருக்கு முறையாக வர வேண்டிய ரூ.3 கோடியைத் தருமாறு காப்பீட்டு நிறுவனத்தை அணுகியுள்ளனர். அரசு பள்ளியில் ஆய்வக உதவியாளராக பணியாற்றி வருபவருக்கு 6 மாதங்களுக்கு முன்பு ரூ.3 கோடிக்கு 4 பாலிசிகள் எடுக்கப்பட்டதால் சந்தேகம் அடைந்த இன்சூரன்ஸ் நிறுவனம் இதுகுறித்து போலீஸில் புகார் செய்தது. தனிப்படை போலீஸார், 10 நாட்களில் புலன்விசாரணை மேற்கொண்டு உண்மையை கண்டுபிடித்தனர்.



2 மகன்களின் செல்போன் உரையாடல்கள், அவர்களின் தொடர்புகள் குறித்து குடும்பத்தாரிடம் நடத்திய விசாரணை ஆகியவை உண்மையை வெளிக்கொண்டு வந்தன. சம்பவத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பாக அதே ஆட்களை வைத்து நாகப் பாம்பு ஒன்றைக் கொண்டு வந்து கணேசனை கடிக்க வைத்துள்ளனர். பாம்பு கடித்தும் அப்போது அவர் பிழைத்துக் கொண்டார். அதனால், இந்த முறை கொடிய விஷம் கொண்ட கட்டுவிரியன் பாம்பை கொண்டு வந்து கழுத்து பகுதியில் கடிக்க வைத்துள்ளனர்.



### பாம்பு கடிக்க வைக்க ரூ.1.50 லட்சம் கூலி

கொடிய விஷம் கொண்ட கட்டுவிரியன் பாம்பை காட்டில் பிடித்து கொண்டு வந்து கணேசனின் கழுத்தில் கடிக்க வைத்து கொலை செய்வதற்கு கூலியாக, ரூ.1.50 லட்சத்தை மோகன்ராஜ் கொடுத்துள்ளார். மோகன்ராஜ் செல்போனில் இருந்து கூகுள் பே மூலம் நவீன் குமார் என்றவருக்கு ரூ.90 ஆயிரம் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் ரூ.60 ஆயிரத்தை ரொக்கமாக கொடுத்துள்ளார். இப்பணத்தை பாம்பு பிடிப்பவரான தினகரன் மற்றும் அவருடன் செயல்பட்ட 3 பேரும் பிரித்துக் கொண்டனர்.

இந்த வழக்கை சிறப்பான முறையில் புலன் விசாரணை செய்த தனிப்படை போலீஸாரை ஐஜி, எஸ்.பி. ஆகியோர் பாராட்டினர். கணேசனின் 2 மகன்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

**சுரேஷ்பாபு**, திருவள்ளூர்.

# ‘ரவுடியிஸத்தை தடுப்பது சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு’




**சென்னையில் கிரைம் பீட் செய்தியாளராக பல ஆண்டுகள் பணி செய்து திடுக்கிடச் செய்யும் பல்வேறு வழக்குகளை செய்தியாக்கி தந்தவர் மூத்த பத்திரிகையாளர் ராஜதுரை. தற்போது தமிழகம் சந்தித்து வரும் முக்கிய நிகழ்வுகள் குறித்து அவர் வழங்கிய நேர்காணலின் சுருக்கமான பதிவு இது. அவரது முழு நேர்காணலை தக்கார் குரல் யூட்யூப் சேனலில் காணலாம்.**

**கேள்வி: “கிரைம் பீட்” செய்தியாளராக இருந்துள்ளீர்கள். உங்கள் அனுபவத்தில் ரவுடிகள் வாழ்க்கை குறித்து...**

**பதில்:** *ரவுடிகளின் முடிவு கோரமாக இருக்கும். ஒரு கட்டத்தில் போலீஸ் அல்லது சக ரவுடிகளால் கொல்லப்படுகிறார்கள். அவர்கள் குடும்பம் சின்னாபின்னமாகிறது.*

**கேள்வி: ரவுடிகள் உருவாகாமல் தடுக்கும் பொறுப்பு யாருடையது?**

**பதில்:** *இது சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு. காவல்துறை, சிறைத்துறை, பெற்றோர்,ஆசிரியர் என்று அனைத்து தரப்புக்கும் இதில் பங்கு உள்ளது.*

**கேள்வி: பொறுப்பு டிஜிபி நியமனம் குறித்து..**

**பதில்:** *இது தமிழக அரசின் தவறான செயல். சீனியாரிட்டி அடிப்படையில் தகுதியான அதிகாரி உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.*

**கேள்வி: தவறு என்று தெரிந்திருந்தும் அரசு இந்த செயலை செய்தது ஏன்?**

**பதில்:** *சட்டமன்றத் தேர்தல் மிக நெருக்கத்தில் இருப்பதால்!*

**கேள்வி: சவுக்கு சங்கர் கைது குறித்து உங்கள் கருத்து?**

**பதில்:** *5 மாதத்துக்கு முந்தைய புகாரின் பேரில் அவர் கைது செய்யப்பட்டதால் பலத்த விமர்சனங்கள் எழுந்தன. பொது நலனை மையப்படுத்தியதாக அவருடைய கருத்துப் பகிர்வுகள் இருந்திருந்தால் அவருக்கு ஆதரவு அதிகமாக இருந்திருக்கும்.*

**கேள்வி: பொதுவாக, மக்கள் மத்தியில் காவல்துறை மீது நம்பிக்கையின்மையும் அதிருப்தியும் நிலவுவது ஏன்?**

**பதில்:** *ஏராளமான நல்ல அதிகாரிகள், காவலர்கள் சத்தமின்றி செய்யும் நல்ல காரியங்கள் வெளியில் தெரிவதில்லை. காவல்துறை மீது நம்பிக்கை வைக்க வேண்டியது அவசியம்.*


**கேள்வி: பத்திரிக்கையாளர் மன்றம் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு விருந்தினர்களாக அரசியல் பிரமுகர்கள், உயர் அதிகாரிகளை அழைப்பது சரியான அணுகுமுறையா?**

**பதில்:** *பதவிகளில் இருப்போர் தவறு இழைக்கும் பட்சத்தில் அதுகுறித்து தயக்கமின்றி எழுதுவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். அந்த அளவில், அவர்கள் உடனான பழக்கத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.*

## சுற்றுலாத்தலமாக உருவெடுக்குமா?

# ராணிப்பேட்டையின் ‘கடல்’ காவேரிப்பாக்கம் ஏரி







பாலாற்றின் கரையோரம் அமைந்துள்ள வளமான மாவட்டம் ராணிப்பேட்டை. இம்மாவட்டத்திற்குள் பாலாறு சுமார் 45 கிலோ மீட்டர் தூரம் பயணிக்கிறது. வேலூருக்குள் நுழையும்போது அழகாக காட்சியளிக்கும் பாலாறு, ராணிப்பேட்டை மாவட்டத்திற்குள் நுழையும்போது அதன் பிரம்மாண்டமான பரப்பால் நம்மை வியக்க வைக்கிறது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் மிக முக்கியமான நீர் ஆதாரமாக திகழ்வது பாலாறும், அதிலிருந்து கால்வாய்கள் வழியாக ஏரிகளுக்கு கொண்டு செல்லப்படும் தண்ணீருமே ஆகும். குறிப்பாக, திருமலைச்சேரி ஏரியும், தமிழகத்தின் இரண்டாவது பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரியும் இம்மாவட்டத்தின் உயிர்நாடிகள்.

சுமார் 30க்கும் மேற்பட்ட ஏரிகளைத் தன்னுள் இருந்து நிரப்பும் ‘கடல்’ போன்ற பரப்பைக் கொண்டது இந்த ஏரி. காவிரி ஆற்றைப் போலவே சுமார் 6 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களை செழிக்கச் செய்யும் நீர்ப்பிடிப்புப் பகுதி என்பதால், இதன் கரையில் அமைந்துள்ள ஊருக்கு ‘காவேரிப்பாக்கம்’ எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது.

### நீர் மேலாண்மையும், நவீன கண்காணிப்பும்

பாலாற்றின் குறுக்கே அமைந்துள்ள வாலாஜா அணைக்கட்டில் இருந்து வெட்டப்பட்ட கால்வாய் வழியாக காவேரிப்பாக்கம் ஏரிக்கு நீர் வருகிறது. இந்த ஏரியின் ஆழம் 30.65 அடி ஆகும். ஏரியின் நீர்மட்டத்தை துல்லியமாக கண்காணிக்க மூல மதகு பகுதியில் அதிநவீன ரேடார் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இது நேரடியாக சென்னை பேரிடர் மேலாண்மை அலுவலகத்திற்கு தகவல்களை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்பேதைய வடகிழக்கு

# பல்லவர் காலத்துப் பொக்கிஷம்



**இயற்கையாகவே நீர் தேங்கும் வசதி கொண்ட இப்பகுதியை, கி.பி. 9ம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் ஏரியாக வடிவமைத்து அதன் கரைகளை திருத்தி அமைத்தார். சுமார் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விரிந்து கிடக்கும் இந்த ஏரியின் கரை மட்டும் சுமார் 8 முதல் 9 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எந்தவித நவீன இயந்திரங்களும் இன்றி மிக நேர்த்தியான முறையில் இந்தக் கரை அமைக்கப்பட்டுள்ளது. கரையின் உயரத்தைக் காணும்போது பல்லவர் காலத்து நீர் மேலாண்மை திறனை எண்ணி நாம் வியக்காமல் இருக்க முடியாது. இது ஒரு வரலாற்றுச் சின்னமாக பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று.**

பருவமழையால் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து, அக். நவ. மாதத்தில் 27.7 அடி உயரத்தை எட்டியுள்ளது.

### விவசாயிகளின் வாழ்வாதாரம்

சுமார் 10 மதகுகள் கொண்டுள்ள இந்த ஏரி, ராணிப்பேட்டை மாவட்ட விவசாயத்தின் முதுகெலும்பாகத் திகழ்வதன் மூலம் சுமார் 30க்கும் மேற்பட்ட கிராமங்கள் நேரடியாகப் பாசன வசதி பெறுகின்றன. சுமார் 6 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலங்கள் விளைச்சலுக்கு இந்த நீரையே நம்பியுள்ளன. மேலும், சுற்றுவட்டார கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டத்தை பராமரிப்பதிலும், குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதிலும் இந்த ஏரி முக்கியப் பங்கு வகிக்கிறது.

ஆண்டு முழுவதும் வற்றாத ஏரியாக இருப்பதால் முக்குளிப்பான், நாமக்கோழி, நீலத் தாழைக்கோழி, கிரேட் கார்மரண்ட் (நீர் காகம்), மீன்கொத்தி, அன்னம், சாம்பல் நாரை போன்ற நீர்வாழ் பறவைகளின் புகலிடமாக காவேரிப்பாக்கம் ஏரி உள்ளது. மேலும் நாரை கொக்கு, கூழைக்கடா உள்ளிட்ட வலசை போகும் பறவைகள் இங்கு அதிகளவில் தஞ்சமடைகின்றன.

இந்த ஏரியை புனரமைத்து, படகு சவாரி, நடைப்பயிற்சி பாதை, பூங்காக்கள் மற்றும் மின் விளக்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் நீண்டகால கோரிக்கையாக உள்ளது. இதனை ஒரு பொழுதுபோக்கு மையமாக மாற்றுவதன் மூலம் உள்ளூர் மக்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், மாவட்டத்தின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும்.



விவசாய சங்கங்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுச் செயல்படுத்தினால் காவேரிப்பாக்கம் ஏரி வெறும் நீர் நிலையாக மட்டுமல்லாமல், இராணிப்பேட்டை மாவட்டத்தில் மிகச்சிறந்த அடையாளமாகவும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒரு பொக்கிஷமாகும் என்பதில் ஐயமில்லை.

**ராஜீவ்**, ராணிப்பேட்டை



## சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில்

# எப்போது முடியும் விரிவாக்கப் பணி?

## சர்வீஸ் சாலையில் செல்வதற்கு

# சுங்கக்கட்டணம்!

**பல ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடைபெற்று வரும் சாலை விரிவாக்க பணிகளை தேசிய நெடுஞ் சாலை துறை ஆணையம் விரைந்து முடிக்க வேண்டும், கிடப்பில் உள்ள 15க்கும் மேற்பட்ட மேம்பால பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை சீரமைப்பதோடு, பணிகள் முடியும் வரை சுங்கக்கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று வாகன ஓட்டிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.**

சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் ரூ.1500 கோடி செலவில் 2012ம் ஆண்டு சாலை விரிவாக்க பணி தொடங்கியது. பெரும் எதிர்பார்ப்பிற்கு இடையே தொடங்கப்பட்ட இந்தப் பணி ஆமை வேகத்தில் நடந்து வருகிறது. இந்த சாலைப் பணிகள் முடிந்து மக்கள் பயன்பாட்டுக்கு வந்த பிறகு, பெங்களூர் சென்னை இடையிலான பயணம் அடியோடு மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இந்த திட்டம் நிறைவடைய மேலும் 4 முதல் 5 ஆண்டுகள் வரை ஆகலாம் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. இந்த சாலையில் சராசரியாக 3 கிலோ மீட்டருக்கு ஒரு மேம்பாலம் வருகிறது. ஆனால் பெரும்பாலான மேம்பாலத்திலும், 10% பணியோடு (அதாவது நடுவில் தூண் அமைத்ததோடு) அப்படியே உள்ளது. இதனால் இந்த மேம்பால பணிகள் நடைபெற்று வரும் சாலையை கடப்பது பெரும் சவாலாக இருப்பதாக வாகன ஓட்டிகள் தெரிவித்தனர்.

3 கிலோ மீட்டருக்கு ஒரு மேம்பாலம் வருகிறது அதில் ஒவ்வொரு 2 கிலோ மீட்டருக்கு இடையே ஒரு டேக் டைவர்ஷன் அதனைத் தொடர்ந்து ஒரு கிலோமீட்டர் சாலையும் குண்டும் குழியுமாக இருப்பதால் வாகன ஓட்டிகள் நாள்தோறும் அவதி அடைந்து வருகின்றனர். இதுதவிர ஆங்காங்கே சாலை அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருவதால் போக்குவரத்து நெரிசலால் வாகன ஓட்டிகள் பெரும் மன

உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களுக்குச் சுங்கக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது. இப்போது அவை ஃபாஸ்ட் டேக் தானியங்கி முறையில் வசூலிக்கப்படுகிறது.

சாலைகளைப் பராமரிக்கவே இந்த சுங்கக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது. ஆனால், இந்த நெடுஞ்சாலையில், பல இடங்களில் சாலைகள் முறையாகப் பராமரிக்கப்படாத நிலையிலும், சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இதற்கிடையே கடந்த ஆண்டு ஜுன் 27ம் தேதி மத்திய அமைச்சர் நிதின் கட்கரி இதுதொடர்பாக சில முக்கிய கருத்துகளைத் தெரிவித்திருந்தார். அதாவது சாலைகள் சரியாக இல்லை என்றால் அந்த குறிப்பிட்ட சாலைகளுக்குச் சுங்க கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று அவர் கூறியிருந்தார்.

ஏற்கனவே இந்த நெடுஞ்சாலை விரிவாக்க பணிகள் முடியும் வரை, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் வாலாஜாபேட்டை சுங்கச்சாவடிகளில் பாதி கட்டணம்தான் வசூலிக்க வேண்டும் என 2021ல் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதைத் தொடர்ந்து இந்த 2 சுங்கச் சாவடிகளில் பாதி கட்டணம்தான் வசூலிக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் சுங்க கட்டணம் உயர்த்தப்பட்டபோதும், இந்த 2 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்படவில்லை.

இந்த விரிவாக்க பணிக்காக ஆங்காங்கே சாலையில் ஏற்படுத்தியுள்ள பள்ளங்கள் மற்றும் சாலைப் பழுது ஆகிய காரணங்களால் சுங்கச்சாவடிகளில் வசூலிக்கும் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த இரு சுங்கச்சாவடிகளுக்கு இடையே மட்டும் 15க்கும் மேற்பட்ட மேம்பாலங்கள் அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் சாலைகள் ஆங்காங்கே குண்டும் குழியுமாக இருப்பதால் வாலாஜாபேட்டையில் இருந்து ஸ்ரீபெரும்புதூர் வருவதற்கே சுமார் 3 மணி நேரம் ஆகிறது. குறிப்பாக குண்டும் குழியுமாக உள்ள சர்வீஸ் சாலையிலேயே அதிகபட்ச தூரம் செல்ல வேண்டிய நிலையுள்ளது.

ஆகவே பல ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடைபெற்று வரும் சாலை விரிவாக்க பணிகளை தேசிய நெடுஞ்சாலை துறை ஆணையம் விரைந்து முடிக்க வேண்டும், கிடப்பில் உள்ள 15க்கும் மேற்பட்ட மேம்பால பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை சீரமைப்பதோடு, பணிகள் முடியும் வரை சுங்கக்கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று வாகன ஓட்டிகளும் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

**கவி பாலா**, காஞ்சி



# கொடைக்கானலில் அதிகரிக்கும்

# போதைக் காளான் பயன்பாடு







திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் ஒரு சர்வதேச சுற்றுலா தலமாகும். இங்கு நிலவும் காலநிலையை அனுபவிக்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர், இங்கு இயற்கை எழில் கொஞ்சும் பில்லர் ராக், குணா குகை, பேரிஜம் ஏரி, மன்னவனூர் ஏரி, நட்சத்திர ஏரி, பிரையண்ட் பூங்கா உள்ளிட்ட ஏராளமான கண்கவர் பகுதிகள் உள்ளன. மேலும் புதிதாக பெப்பர் அருவி, புல்லாவெளி அருவி என அட்வென்சர் டூரிசமாக ஜீப் சவாரிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

எழில் கொஞ்சும் இங்குள்ள வனப்பகுதிகளில் இயற்கையாகவே நூற்றுக்கும் மேற்பட்ட காளன் வகைகள் விளைகின்றன. இவற்றில் போதை காளன் வகையும் உள்ளது. இந்த காளனை உட்கொள்ளும்போது போதை கிடைப்பதாக அதைப் பயன்படுத்துவோர் கூறுகின்றனர், மேலும் இந்த காளனை உட்கொண்டு சிலர் உயிரிழந்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இதையடுத்து கொடைக்கானல் காவல் துறையினர் போதை காளன் விற்பனையை தடுத்து நிறுத்தி வருகின்றனர். போதை காளான் விற்பவர்களை கைது செய்வதோடு, அவற்றை



பறிமுதலும் செய்து வருகின்றனர். இந்த வகையில் போலீஸார் நடவடிக்கை எடுத்து வந்தாலும் போதைக் காளான் விற்பனை குறைந்ததாக தெரியவில்லை.

குறிப்பாக கொடைக்கானல் மேல்மலை கிராமங்களாக உள்ள பூம்பாறை, மன்னவனூர், கூக்கால், பூண்டி, கிளாவரை உள்ளிட்ட கிராமங்களில் விவசாயம் மட்டுமே பிரதான தொழிலாக உள்ளது. இங்கு இங்கீலீஸ் காய்கறிகள் என்றழைக்கப்படும் கேரட் உள்ளிட்ட வேர் காய்கறிகள் அதிகளவில் விளைவிக்கப்படுகின்றன. இந்த கிராமங்களில் அடுக்கு அடுக்காக அமைந்திருக்கும் விவசாய நிலங்கள் இயற்கை அழகுடன் இருப்பது தனி சிறப்பாகும்.

ஆனால், இந்த விவசாய நிலங்களை குறைந்த விலைக்கு குத்தகைக்கு எடுக்கும் வெளிமாநிலத்தவர்கள், டூம் ஹவுஸ், ஏ பிரேம், டெண்ட் ஹவுஸ், கன்டைனர் ஹவுஸ் என சுற்றுலாப் பயணிகளை கவரும் விதமாக அறைகளை மலை உச்சியில் அமைத்து, ஜீப்கள் மூலம் ஆபத்தான முறையில் சுற்றுலாப் பயணிகளை அழைத்து சென்று ரூம் வாடகைக்கு விடுகின்றனர்.

மேலும் இந்த அறைகளிலேயே போதை காளன் விற்பனையும் அமோகமாக லட்சக்கணக்கில் நடைபெற்று வருவதாக பரவலாக குற்றம்சாட்டப்படுகிறது. இந்த போதை காளானுக்காகவே கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநில சுற்றுலாப் பயணிகள் கொடைக்கானலில் தங்காமல், இந்த மலைக் கிராமங்களுக்கு வருகின்றனர். இவர்களில், இளம் பெண்கள், இளைஞர்கள் அதிகம். இதனால் இந்த கிராமங்களில் பல்வேறு சட்டவிரோத செயல்களும் அரங்கேறி வருவதாக குற்றம்சாட்டப்படுகிறது.

போதைக் காளன் கலாச்சாரம் குறித்து சமூக ஊடகமான இன்ஸ்டாகிராமில் பல பதிவுகள் வெளிவந்துள்ளன. போதை காளன் பறிப்பது முதல் உட்கொள்வது வரை பல்வேறு பதிவுகள் இன்ஸ்டாகிராமில் வெளியிடப்படுவது, இந்த பகுதிக்கு இளைஞர்களை ஈர்க்க முக்கிய காரணமாக அமைந்து உள்ளது.

இதில் மாவட்ட போலீஸார் தனிக்கவனம் செலுத்தி போதைக் காளான் கலாச்சாரத்தை ஒழிக்க வேண்டும் என்றும், விளைநிலங்களை அழித்து ஏ பிரேம், கண்டெய்னர் ஹவுஸ், டூம் ஹவுஸ் உள்ளிட்ட தங்கும் விடுதிகளை அமைக்கும் நபர்கள் மீது மாவட்ட நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

**கணேசன்,** கொடைக்கானல்

# உயிரைக் காக்கும்

# சூரை மீன்



மீன் ஆராய்ச்சியாளர் **வினோத்**

சூரை மீன் (Tuna Fish) என்பது கடல் மீன்களில் மிகவும் சத்தான மற்றும் சுவையான மீன் வகைகளில் ஒன்றாகும். இது உலகம் முழுவதும் விரும்பி உண்ணப்படும் ஒரு 'சூப்பர் ஃபுட்' (Super Food) என்று அழைக்கப்படுகிறது.

## சூரை மீனின் முக்கிய ஊட்டச்சத்துக்கள்

சூரை மீனில் உடலுக்குத் தேவையான அத்தியாவசிய சத்துக்கள் கொட்டிக்கிடக்கின்றன:

• ஒமேகா3 கொழுப்பு அமிலங்கள்: இதய ஆரோக்கியத்திற்கு மிக முக்கியமானது.

• உயர்தர புரதம் (High Protein): தசை வளர்ச்சிக்கு உதவுகிறது.

• வைட்டமின்கள்: வைட்டமின் B12 மற்றும் வைட்டமின் D ஏராளமாக உள்ளது.

• தாதுக்கள்: செலினியம், துத்தநாகம் (Zinc), பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் நிறைந்துள்ளன.

## மருத்துவப் பயன்கள்

• இதயத்தின் நண்பன்: ஒமேகா3 சத்துக்கள் இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பைக் (LDL) குறைத்து, மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது.

• மூளை வளர்ச்சி: இதில் உள்ள டிபிகி வேதிப்பொருள் குழந்தைகளின் மூளை வளர்ச்சியைத் தூண்டுகிறது மற்றும் பெரியவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைக்கிறது.

• எடை குறைப்பு: இதில் கொழுப்புச் சத்து குறைவாகவும், புரதம் அதிகமாகவும் இருப்பதால் உடல் எடையைக் குறைக்க விரும்புவோருக்கு இது மிகச்சிறந்த உணவு.


• கண் பார்வை: வாரத்திற்கு இரண்டு முறை சூரை மீன் சாப்பிடுவது கண் வறட்சி மற்றும் பார்வை குறைபாடுகளைத் தடுக்க உதவும்.

• சரும ஆரோக்கியம்: இதில் உள்ள 'எலாஸ்டின்' (Elastin) புரதம் சருமத்தை பளபளப்பாகவும், இளமையாகவும் வைத்திருக்க உதவுகிறது.

## சூரை மீன் வகைகள்

கடலில் பல வகையான சூரை மீன்கள் காணப்படுகின்றன. அதில் முக்கியமானவை:

**மஞ்சள் துடுப்பு சூரை** (Yellowfin Tuna): இவை




## எச்சரிக்கை தேவை

பாதரசம் (Mercury): சூரை மீன் பெரிய வகை மீன் என்பதால், இதில் மற்ற மீன்களை விட பாதரசத்தின் அளவு சற்று அதிகமாக இருக்கலாம். எனவே, கர்ப்பிணிப் பெண்களும், குழந்தைகளும் இதனை மிதமான அளவில் (வாரத்திற்கு ஒருமுறை) உண்பது நல்லது.

சமைக்கும் முறை: எண்ணெயில் பொரிப்பதை விட, குழம்பாகவோ அல்லது ஆவியில் வேகவைத்தோ (Steamed) சாப்பிடுவது முழுமையான சத்துக்களைக் கொடுக்கும். “உயிரைக் காக்கும் மீன்” என்று அழைக்கப்படும் சூரை மீன், உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும் ஒரு சிறந்த இயற்கை வரப்பிரசாதம். முறையான அளவில் எடுத்துக்கொண்டால் இது ஆரோக்கியத்திற்குப் பெரும் பலன் தரும்.

இந்தியப் பெருங்கடலில் அதிகமாகக் காணப்படுகின்றன. இதன் உடல் பக்கவாட்டில் மஞ்சள் நிறக் கோடுகளுடனும், நீண்ட மஞ்சள் நிறத் துடுப்புகளுடனும் காணப்படும். இவை ஏற்றுமதிக்கு மிகவும் முக்கியமானவை.

**வரிக் சூரை** (Skipjack Tuna): இந்தியாவில் வணிக ரீதியாக அதிகம் பிடிக்கப்படும் வகை இதுவாகும். இதன் வயிற்றுப் பகுதியில் கருமையான நீளமான கோடுகள் இருக்கும். இவை பொதுவாக அளவில் சிறியவை.

சின்னச் சூரை (Little Tunny / Euthynnus affinis): இவை தமிழகக் கடற்கரை பகுதிகளில் மிகவும் பிரபலம். இதன் முதுகில் அலை போன்ற கருப்பு நிறக் கோடுகள் இருக்கும். உள்ளூர் சந்தைகளில் இவை அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

### சூரை மீன்களின் தனித்துவம்

சூரை மீன்கள் வாழ்நாள் முழுவதும் நிறுத்தாமல் நீந்திக்கொண்டே இருக்கும். நீந்துவதை நிறுத்தினால் ஆக்சிஜன் கிடைக்காமல் இவை இறந்துவிடும். பெரும்பாலான மீன்கள் குளிர் இரத்தப் பிராணிகள் (Cold-blooded). ஆனால், சூரை மீன்கள் இதற்கு விதிவிலக்கு இவை சூடான இரத்தம் (Warm-Blooded) கொண்டவை.

### கடலின் சிறுத்தை (Cheetahs of the Ocean)

சூரை மீன்கள் மிகச்சிறந்த வேட்டைக்காரர்கள். இவை மணிக்கு 70 முதல் 75 கிலோமீட்டர் வேகத்தில் நீந்தக்கூடியவை. இவற்றின் உடல் அமைப்பு ஒரு ‘டார்ப்பிடோ’ (Torpedo) ஏவுகணைபோல இருப்பதால், தண்ணீரைக் கிழித்துக்கொண்டு மிக வேகமாகச் செல்லும். மற்ற மீன்களின் சதை வெள்ளையாக இருக்கும், ஆனால் சூரை மீனின் சதை சிவப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இதற்குக் காரணம் இவற்றின் தசைகளில் உள்ள ‘மயோகுளோபின்’ (Myoglobin) என்ற புரதம்.





# ஆற்றுநீரை திருடும் தொழிற்சாலைகள்

## வேதனையில் விவசாயிகள்



பழனி அருகே குதிரையாறு அணையில் இருந்து வரும் தண்ணீரை மின்மோட்டார்கள் மூலம் திருடி தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழனியை அடுத்த பாப்பம்பட்டி பகுதியில் அமைந்துள்ள குதிரை ஆறு அணையில் இருந்து விவசாயத்திற்காக முத்து குளம் வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டுகிறது.

இந்நிலையில் இரட்டையம்பாடி கிராமம் பஞ்சதாங்கி பகுதியில் செயல்பட்டு வரும் தொழில்சாலைகளின் நிர்வாகிகள் குள வாய்க்காலில் திறக்கப்பட்டுள்ள தண்ணீரை திருட்டுத்தனமாக மின் மோட்டார்கள் வைத்து திருடி வருவதாக குற்றம்சாட்டப்படுகிறது.

மேலும் ஆத்தூர் கிராமப் பகுதியின் அருகே உள்ள ஆற்றில் மின் மோட்டார்களை வைத்து இரவு பகல் என்று பார்க்காமல் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் கொண்டு செல்கின்றனர். இதனால் விவசாயத்திற்கு போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை என விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.







சங்கரராமநல்லூர் பேரூராட்சிக்கு உட்பட்ட 5வது வார்டு பகுதியில் உள்ள ஆத்தூர் கிராமத்தில், ஆற்றில் அதிகப்படியாக மின்மோட்டார்களை வைத்து தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் கொண்டு செல்வதாக புகார் எழுந்துள்ளது.

மேலும் சங்கராமன் நல்லூர் பேரூராட்சியில், மின் மோட்டார்களை வைத்து தண்ணீர் திருட்டில் ஈடுபடும் நபர் மீது நடவடிக்கை எடுக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என அப்பகுதி விவசாயிகளும் சமூக ஆர்வலர்களும் வலியுறுத்தியும் அதிகாரிகள் தீர்மானம் நிறைவேற்ற மறுத்து வருவதாக புகார் எழுந்துள்ளன.

இதோடு மட்டுமல்லாமல், ஆற்றில் இருந்து குழாய் பதிக்கப்பட்டு தொழிற்சாலைகளுக்கு குழாயின் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு வருகின்றன.

சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறை அதிகாரிகள் வருவாய்த்துறை அதிகாரிகள் மின்சார வாரிய அதிகாரிகள் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் இதில் தலையிட்டு, ஆற்று நீரை தொழிற்சாலைகளுக்கு திருடிச் செல்லும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மின் மோட்டார்களை பறிமுதல் செய்ய வேண்டும் எனவும் அப்பகுதி விவசாயிகளும் சமூக ஆர்வலர்களும் வலியுறுத்துகின்றனர்.

தொடர்ந்து இந்த ஆண்டிற்கான பருவமழை மிகக் குறைவாகவே பெய்துள்ளதால் விவசாயிகளுக்கு போதுமான தண்ணீர் இல்லாத சூழ்நிலையில் இதுபோன்று தண்ணீர் திருட்டில் ஈடுபட்டு விவசாயத்தை பாதிக்கும் வகையில் தொழிற்சாலை உரிமையாளர்கள் நடந்து கொள்வது வேதனை அளிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.





# கடலூர் சிப்காட் தொழிற்சாலை விரிவாக்கம்

## தள்ளுமுள்ளுவில் முடிந்த கருத்துக்கேட்புக் கூட்டம்

சிப்காட்டில் உள்ள ரசாயன தொழிற்சாலையை விரிவாக்கம் செய்வது தொடர்பாக நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம், கடும் வாக்குவாதம் தள்ளுமுள்ளு காரணமாக பாதியில் முடிந்தது.

கடலூர் முதுநகர் அருகே உள்ள சிப்காட் பகுதியில் 50க்கும் மேற்பட்ட ரசாயன தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதில் கெம்பாஸ்ட் ரசாயன தொழிற்சாலை விரிவாக்கம் செய்ய திட்டமிட்டுள்ளது. இதற்காக தியாகவல்லி நொச்சிக்காடு நடுத்தெட்டு பகுதிகளில் 440 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

ஏற்கனவே ரசாயன தொழிற்சாலைகளால் இந்த பகுதி முழுவதும் காற்று மாசு, குடிநீர் மாசு ஏற்பட்டு மக்கள் வாழ்வதற்கே வழி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இந்நிலையில், ரசாயன தொழிற்சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் தொழிற்சாலை விரிவாக்கம் குறித்த மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கடலூர் முதுநகர் அருகே உள்ள கண்ணாரப்பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் புண்ணியகோட்டி தலைமை தாங்கினார். கடலூர் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரி ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். தொழிற்சாலை விரிவாக்கம் குறித்து தொழிற்சாலை அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். கூட்டத்தில் பல்வேறு பொது நல அமைப்புகள், சிபிஎம், சிபிஐ, பாமக, விசிக, அதிமுக, தவாக உள்ளிட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், இயக்குநர் கௌதமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் திடீரென இரு தரப்பினரிடையே தொழிற்சாலை விரிவாக்கம் குறித்து கருத்து வேறுபாடு எழுந்தது. இதனால் இரு தரப்பினரிடையே வாக்குவாதம் மற்றும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

இதையடுத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஜெயக்குமார் தலைமையில் போலீஸார் குவிக்கப்பட்டனர். தொடர்ந்து அரசியல் கட்சியினர் பேச முற்பட்டபோது எதிர் கோஷமும், ஆதரவு கோஷமும் எழுந்ததால் பதற்றமான சூழ்நிலை நிலவியது. காவல் துறையினரால் கட்டுப்படுத்த முடியாத நிலையில் கூட்டத்தை பாதியிலேயே முடித்துவிட்டு வருவாய் அலுவலர் சென்றுவிட்டார்.

**பாரி**, கடலூர்



# பித்தப்பை கற்கள்: அறுவைசிகிச்சை மட்டுமே வழியா?

ராதா அம்மாள், வயது 52. சென்னையில் வசிக்கிறார். திடீர் என்று ஒரு நாள் வலது பக்க வயிற்றில் கூர்மையான வலி, மயக்கம். பயந்துபோன குடும்பம் அவரை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றது. அல்ட்ராசவுண்ட் செய்தபோது தான் தெரிந்தது பித்தப்பையில் பல கற்கள். மருத்துவர் உடனே அறுவைச் சிகிச்சை செய்யலாம் என்றார். ஆனால், ராதா அம்மாளின் அண்டை வீட்டுக்காரர் சொன்னார், “எனக்கு 10 வருடமாய் கற்கள் இருக்கு, ஹோமியோபதி மாத்திரை வாங்கி சாப்பிடுறேன், ஏதும் பிரச்சனையில்லை!” என்று. ஒரே நோய், இரு நபர்கள், ஆனால் இரண்டு முற்றிலும் மாறுபட்ட சிகிச்சை முறைகள். எது சரி?

மருத்துவப் பேராசிரியர் **கணேஷ் லட்சுமணன்**

பித்தப்பை கற்கள் என்பது இன்றைய இந்தியாவில் குறிப்பாக நகர்ப்புறங்களில் ஒரு ‘சைலண்ட் எபிடெமிக்‘ (சத்தமின்றி பரவும் தொற்றுநோய்) ஆகிவிட்டது. நாள்தோறும் வேகம் மிகுந்த வாழ்க்கை, ஃபாஸ்ட் ஃபுட் சாப்பாடு, உடலியக்கக் குறைவு, அலுப்புத் தீர கடைக்கு சென்று வாங்கும் எண்ணெய் மற்றும் பொரித்த உணவுகள் இவை அனைத்துமே இந்த நோய்க்கு விரும்பி அழைக்கும் அழைப்பிதழ்கள். ஆண்களைவிட பெண்கள் இதனால் இரு மடங்கு பாதிக்கப்படுகிறார்கள். நாற்பது கடந்த பிறகு இந்த ஆபத்து அதிகம். ஆனால் இப்போது முப்பதுக்குட்பட்டோரிடமும் இது பதிவாகிறது.

**மிக முக்கியமான ஒரு உண்மை:**

பித்தப்பையில் கற்கள் இருந்தாலும் 80% பேருக்கு எந்த அறிகுறியுமே இருக்காது! மற்றொரு பரிசோதனைக்காகச் சென்று அல்ட்ராசவுண்ட் செய்யும்போதுதான் தற்செயலாகத் தெரியவரும். “ஐயோ, என்னிடமும் கற்கள் இருக்கின்றனவே!” என்ற பீதி அடையத் தேவையில்லை.

### அறுவை சிகிச்சை எப்போது அவசியம்?

சில நிலைகள் மிகவும் ஆபத்தானவை. அப்போது அறுவை சிகிச்சை என்பது உயிரைக் காப்பதற்கான ஒரே வழி.

- கற்கள் பித்தப்பையைத் துளைத்து விட்டால் (கடுமையான அழற்சி).
- கற்கள் பித்த நாளத்தில் (BILE DUCT) சிக்கி, மஞ்சள் காமாலை உண்டாக்கினால்.
- பித்தப்பைக்கு தொற்று ஏற்பட்டு,



காய்ச்சலும் வலியும் வந்தால்.

- பித்தநாளம் அடைபட்டு, மூலக்குழாய் (PANCREAS) பாதிக்கப்பட்டால்.

இந்த அவசர நிலைகளில், உயிர் முதலில். அறுவை சிகிச்சை தவிர்க்க முடியாதது.

ஆனால்... எல்லா கற்களுக்கும் அறுவை சிகிச்சை தேவையா? ஒருபோதும் இல்லை!

“சார், ரிப்போர்ட்ல கற்கள் இருக்கு. சீக்கிரம் ஆப்பரேஷன் பண்ணிக்கலாம்“ இது ஒரு பொதுவான உரையாடல். ஆனால் இது எப்போதும் சரியான முடிவல்ல.

வயிற்று வலி, அஜீரணம், வாயு, மயக்கம் எதுவுமில்லையென்றால், உடனடி அறுவை சிகிச்சை தேவையில்லை. கவனிப்பு மட்டுமே போதும்.

பித்தநீர் குழம்புபோல் (சேறு SLUDGE) இருப்பதும், சிறிய கற்கள் இருப்பதும் மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தப்படலாம்.

அறுவை சிகிச்சைக்கு ஏற்ற உடல் நிலை இல்லாதவர்களுக்கு (இதயம், சுவாச நோய் உள்ளவர்கள்) மாற்று மருத்துவ முறைகள் உள்ளன.

## தேவையில்லாத அறுவை சிகிச்சையின் பின்விளைவுகள்

பித்தப்பையை அகற்றும் லேபரோஸ்கோபிக் அறுவை சிகிச்சை (LAP CHOLECYSTECTOMY) புதிய தொழில்நுட்பத்தில் ஒரு சிறிய வெட்டு மட்டுமே. ஆனால், அந்த உறுப்பு நம் உடலில் இருப்பதற்கு ஒரு காரணம் உண்டு. அது பித்த நீரைச் சேமித்து, செரிமானத்திற்கு உகந்த நேரத்தில் கணைய சாற்றுடன் கலக்க உதவுகிறது.

அந்த இயற்கை சேமிப்புத் தொட்டி (பித்தப்பை) இல்லாமல் போனால்

- பித்தநீர் தொடர்ந்து குடலில் வடிகிறது. இதனால் சிலருக்கு கடும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.
- எண்ணெய் பொருட்கள் சாப்பிட முடியாமல் போகலாம்.
- தொடர்ச்சியான அஜீரணம், வயிற்றெரிச்சல்.
- ‘போஸ்ட் கோலிசிஸ்டெக்டமி சிண்ட்ரோம்‘ என்ற நிலை அறுவை சிகிச்சைக்குப் பின் கூட வலி தொடரும்.

மிகவும் முக்கியமான ஒரு point: பித்தப்பையை



அகற்றிவிட்டாலும், கற்கள் உருவாகக் காரணமான உங்கள் உடல் மாற்றச் சீர்கேடு (METABOLIC DISORDER) அப்படியே உள்ளது. அதாவது, கல்லை 'நீக்க' முடிந்தது, கல்லை 'உருவாக்கும்' தன்மையை இன்னும் 'நீக்க' வில்லை.

### ஹோமியோபதியின் முழுமையான பார்வை

ஹோமியோபதி மருத்துவம் நோயை மட்டும் பார்க்காது; நோயாளியைப் பார்க்கிறது. ராதா அம்மாளுக்கும், அவர் அண்டை வீட்டு மாமாவுக்கும் ஒரே மாதிரியான கற்கள் இருந்தாலும், காரணங்கள் வேறு வேறாக இருக்கலாம்.

### ஹோமியோபதி சிகிச்சை:

- உடலின் பித்த சுரக்கும் இயக்கத்தைச் சீர் செய்கிறது.
- ஏற்கனவே உள்ள சிறு கற்கள் அல்லது சேற்றை கரைக்க உதவுகிறது.
- வலி, வாந்தி, அஜீரணம் போன்ற அறிகுறிகளை நீக்குகிறது.
- கற்கள் மீண்டும் உருவாவதைத் தடுக்கும் வகையில் நீண்ட கால உடல் சீரமைப்பை ஏற்படுத்துகிறது.

இந்த சிகிச்சை முறையின் குறிக்கோள், மருத்துவரின் வழிகாட்டுதலின் படி, தேவையில்லாத அறுவை சிகிச்சையைத் தவிர்ப்பதும், உறுப்பைக் காப்பதுமாகும்.

### வாழ்க்கை முறை மாற்றம்

இந்த நோய் பெரும்பாலும் நம் கையாலேயே வரவழைத்துக் கொள்வது. சிறிய மாற்றங்கள் பெரிய பாதுகாப்பைத் தரும்.

- நீண்ட நேரம் வெறும் வயிற்றில் இருக்காதீர்கள். நேரத்துக்கு சாப்பிடுங்கள்.
- எண்ணெய், கரைசல், பாக்கெட் உணவுகளைக் குறைக்கவும்.
- நார்ச்சத்து (காய்கறிகள், பழங்கள், தானியங்கள்) நிறைந்த உணவை அதிகரிக்கவும்.
- தினமும் குறைந்தது 23 லிட்டர் தண்ணீர் குடியுங்கள்.
- ஒவ்வொரு நாளும் 30 நிமிடம் நடைபயிற்சி இது எந்த நோயையும் விரட்டும் மந்திரம்.
- உடல் எடையைக் கட்டுப்படுத்துங்கள்.
- நீரிழிவு, கொழுப்பு, தைராய்டு இருந்தால் சரியாகக் கட்டுப்படுத்துங்கள்.

ஒரு அல்ட்ராசவுண்ட் ரிப்போர்ட் மட்டும் உங்களை அறுவை சிகிச்சை அறையில் கொண்டு செல்ல வேண்டியதில்லை. நோயின் தன்மை, அறிகுறிகள், உங்கள் ஒட்டுமொத்த உடல் நலம் இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு ஒரு தகுதிவாய்ந்த மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

அவசர நிலைகளில் அறுவை சிகிச்சை ஒரு வரப்பிரசாதம். ஆனால், நிரந்தரமான, இயற்கையான, உறுப்பைக் காப்பாற்றும் மருத்துவத் தீர்வுகளும் இன்று உள்ளன. உங்கள் பித்தப்பையை 'கல்லை' வெளியேற்றி எறியலாம். அல்லது அதைக் 'கல்லாக' மாறாமல் பாதுகாக்கலாம். தேர்வு உங்களுடையது ஆனால், தகவலறிந்த, விழிப்புள்ள தேர்வாக அது இருக்கட்டும். "அறுவை சிகிச்சை கடைசி விருப்பமாக இருக்கட்டும் முதல் தீர்வாக அல்ல."

**(குறிப்பு: இக்கட்டுரை பொதுமக்களுக்கான விழிப்புணர்விற்காக மட்டுமே. எந்தவொரு சிகிச்சை முடிவும் தனிப்பட்ட மருத்துவ ஆலோசனை அடிப்படையில் மட்டுமே எடுக்கப்பட வேண்டும்.)**

# தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்

## முற்றுப்புள்ளி வைக்குமா தமிழக அரசு?



தூய்மைப் பணியாளர் போராட்டம் குறித்து ஜனநாயக வாலிபர் சங்கத்தின் மாநிலத் தலைவர் செல்வராஜ், மாநிலச் செயலாளர் எஸ்.கார்த்திக் ஆகியோர் கூறியதாவது: கடந்த ஜுன் 15ம் தேதி சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ராயபுரம், திருவிக நகர் (5, 6) ஆகிய மண்டலங்களில் இருக்கக் கூடிய அனைத்துத் தூய்மைப் பணியாளர்களையும் ராம்கி எனும் தனியார் நிறுவனத்துடன் சென்னை மாநகராட்சி ஒப்பந்தமிட்டது. அப்பகுதியில் இருக்கக்கூடிய அனைத்து தூய்மை பணியாளர்களையும் தனியாரிடம் தாரைவார்க்கக்கூடிய மிக மோசமான முடிவை சென்னை மாநகராட்சி வெளியிட்டதைக் கண்டித்து உழைப்போர் உரிமை இயக்கம் மற்றும் இந்திய தொழிற்சங்க மையம் போன்ற பல அமைப்புகள் போராடி வந்தன.

இதில் அனைத்து தூய்மைப் பணியாளர்களும் பங்கேற்று பணி நிரந்தரம், வேலைக்கேற்ற ஊதியம் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி போராடினர். தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை அரசு ஏற்க வேண்டும் என்று மாணவர்கள், இளைஞர்கள், முற்போக்கு அமைப்புகள் சார்பில் சென்னை மாநகராட்சி 5, 6 மண்டலங்களின் பணிகளை தனியாரிடம் ஒப்படைக்க கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

மாநகராட்சி நடைபாதையில் அவர்கள் போராட்டம் நடத்துவது பொது மக்களுக்கு இடையூறாக உள்ளது என்று தனிநபர் தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் போராட்டக்காரர்களை அப்புறப்படுத்த உத்தரவிட்டது. தமிழ்நாடு அரசு இவர்களுடைய போராட்டத்தை பல்வேறு வகையிலும் கலைக்க முயற்சித்தது. ஆக.13ம் தேதி இரவோடு இரவாக கைது செய்தது.

விடுதலையான பிறகு அடிப்படை ஊதியம் கூட தேவையில்லை எங்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வரை ஊதியமே இல்லாமல் நாங்கள் வேலை பார்க்கிறோம் என்று சம்பளம் இல்லாமல் வேலை பார்ப்போம் என்ற போராட்டத்தை முன்னெடுக்க முயன்றபோதும் அவர்கள் கைது செய்யப்பட்டனர் .

தற்போது நீதிமன்றத்தை நாடி போராடும் உரிமையைப் பெற்று கீதா, வசந்தி, பாரதி, ஜெனோவா ஆகிய பெண் தூய்மை பணியாளர்கள் நிரந்தர பணி கிடைக்கும் வரை காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியதற்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் தனது முழு ஆதரவை தெரிவித்துள்ளது.

**கோரிக்கைகள்**

தூய்மைப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக வழங்கப்பட்டு வந்த அதே தொகையை மீண்டும் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து மண்டலங்களையும் தனியாருக்கு கொடுப்பதை அரசாங்கம் முழுமையாக கைவிட வேண்டும் என இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் வலியுறுத்துகிறது. இதில் முதல்வர் ஸ்டாலின் நேரடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# Chasing Midnight: How the World Welcomes the New Year?



When the final moments of December 31 arrive, the world doesn't celebrate all at once. Instead, the New Year begins its journey on a tiny Pacific island and then slowly sweeps across oceans, mountains, deserts, and cities, touching every culture on Earth. No other celebration is so beautifully synchronized and yet so wonderfully diverse.

From silent prayers to roaring fireworks, from ancient rituals to modern street parties, the arrival of the New Year is humanity's shared heartbeat. It's a moment of reflection, renewal, and hope.

**The First and Last Places to Welcome the New Year**

The New Year officially begins in Kiritimati Island, part of the nation of Kiribati, positioned just west of the International Date Line. This remote island becomes the planet's first witness to January 1. While most of the world is still in the afternoon of December 31, Kiritimati is already celebrating tomorrow.

As the hours pass, midnight moves westward. New Zealand follows then Australia, where Sydney's fireworks is often watched by over a billion viewers worldwide. It transforms the harbour into a sea of colour and light. After that Asia soon joins in. Tokyo, Hong Kong, Bangkok, and Dubai all mark the moment with their own dazzling traditions.

Finally, more than 26 hours later, the New Year reaches its last destination. It's American Samoa and the uninhabited Baker Island in the Pacific Ocean. Only after they welcome January 1 can the entire world truly say goodbye to the old year.

**Fireworks, Faith and Festivity**

While fireworks dominate many modern celebrations, the deeper meaning of New Year's remains rooted in spiritual reflection.

In Japan, temple bells echo across cities and villages as they are rung 108 times, each toll symbolizing a human desire or weakness to be released before the year begins. Many people visit shrines at midnight to pray for health, success, and happiness.

In China, although Lunar New Year is the major holiday, Western New Year is increasingly celebrated in major cities with lantern festivals, dragon dances, and elaborate light shows.

**Unusual and Fascinating Traditions**

Spain: As the clock chimes at midnight, people eat twelve grapes, each representing luck for one month of the year. The challenge is to finish all grapes before the final bell rings.

Denmark: Friends and neighbours throw old dishes at each other's doors. A doorstep full of broken plates is considered a sign of love, loyalty, and good fortune.

Brazil: Dressed in white for peace and purity, millions gather on beaches. At midnight they jump seven waves, making a wish with each leap.

Scotland: Hogmanay features massive street festivals, fire processions, and the tradition of first footing - the first person to cross your threshold after midnight brings gifts for luck.

Philippines: Circular shapes dominate the celebration ranging from round fruits, polka-dot clothing to coins are believed to attract wealth and prosperity.

Colombia: Some people walk around the block with an empty suitcase to ensure a year full of travel.

Estonia: People traditionally eat seven meals on New Year's Day to gain the strength of seven men.

Greece: Families hang an onion on their door for growth and rebirth and cut the Vasilopita cake with a hidden coin for good luck.

**Modern Celebrations in Iconic Cities**

New York City's Times Square Ball Drop attracts nearly a million spectators in freezing temperatures, continuing a tradition that began in 1907.

In Dubai, skyscrapers like the Burj Khalifa become canvases of light with fireworks and synchronized LED displays.

In Rio de Janeiro, more than two million people flood Copacabana Beach for an ocean of white clothing, music, and dancing until sunrise.

In Paris, the Champs-Élysées glows with lights and fireworks, while London's Thames River becomes the stage for one of Europe's most famous displays.

**Why the World Celebrates**

Beyond the spectacle, New Year represents humanity's most universal emotion. It is a moment when people forgive the past, imagine the future, and believe collectively that tomorrow can be better than yesterday.

As midnight circles the Earth, billions of people pause, count down, kiss, cheer, pray, cry, laugh, and dream all under the same sky. For one night, the entire world becomes one celebration.

Little-Known New Year Facts from Around the World

**The Longest Celebration on Earth**

Because of time zones, New Year's celebrations last over 26 hours worldwide. While people in Kiritimati are already into January 1, others in Hawaii are still eating dinner on December 31.

The Oldest Known New Year Celebration

The earliest recorded New Year festival dates back over 4,000 years to ancient Babylon, where the new year was celebrated in March with an 11-day festival known as Akitu, dedicated to renewal, forgiveness, and rebirth.

**The First Fireworks Came from China**

Fireworks, now the symbol of New Year's Eve, originated in China over 2,000 years ago, when bamboo was thrown into fires to create loud bangs to scare away evil spirits.

**The World's Biggest Countdown Party**

Times Square's New Year celebration in New York City attracts nearly one million people in person and more than one billion viewers worldwide.

**The Coldest and Warmest Celebrations**

In Russia, people often celebrate in sub-zero temperatures with snow falling as fireworks light the sky.

In Australia, New Year arrives in the height of summer, where beach barbecues and harbor swims are part of the tradition.

**Lucky Foods Across Cultures**

Different cultures eat specific foods for good fortune:

- Lentils in Italy for wealth
- Black-eyed peas in the southern United States for prosperity
- Noodles in Japan and China for long life
- Fish in many European countries for abundance

New Year's Resolutions Began in Ancient Times

The tradition of making resolutions began with the Babylonians, who promised their gods they would return borrowed items and pay debts in the new year.

The Most Common New Year's Kiss

The midnight kiss tradition is believed to come from ancient European folklore, symbolizing protection from loneliness and sadness in the coming year.

**Animals and the New Year**

In Romania, people dress as bears and dance through villages to chase away evil spirits and welcome good luck for the coming year.

Unusual Weather Traditions

In parts of Ireland, people bang bread against their doors and walls to scare away bad spirits and hunger from the home.

**One Night, One Planet**


At any given second during New Year's Eve, somewhere on Earth people are counting down.


Vijayalakshmi Veeraiyan, Finland

# The Epstein Files:

# Power, Proximity and the Paper Trail That Won't Disappear

By AV





Jeffrey Epstein cultivated mystery as carefully as he cultivated wealth. To some, he was an eccentric financier with elite connections; to others, a man whose private life raised persistent alarms. By the time federal agents arrested Jeffrey Epstein in July 2019 on charges of sex trafficking minors, he had already become a symbol of something larger than one individual crime: the suspicion that extreme wealth and social power can bend justice itself.

His death in a Manhattan jail cell, weeks later abruptly ended the criminal case. However, it did not end the story. Instead, it shifted the focus to documents: flight logs, contact books, seized electronics, court exhibits, sealed depositions, and discovery files. Together, these records — now commonly referred to as the Epstein files — form a fragmented but troubling archive of how abuse, influence, and silence can coexist at the highest levels of society.

A scandal years in the making

Long before Epstein's 2019 arrest, allegations against him had circulated quietly. In the early 2000s, police investigations in Florida documented accusations from underage girls who said they were recruited, groomed, and abused at his Palm Beach mansion. Yet, in 2008, the paedophile received a controversial plea deal that allowed him to serve a short jail sentence with generous work release, avoiding federal prosecution.

That deal, which is now widely condemned, became a case study in prosecutorial discretion gone wrong. It shielded Epstein from broader scrutiny and, crucially, insulated potential accomplices from investigation. For survivors, it sent a devastating message that even credible testimony could be nullified when wealth and connections are involved.

When Epstein was arrested again more than a decade later, the stakes were enormous. Federal prosecutors signaled that this case would be different. Broader in scope, deeper in accountability. That promise, however, died with Epstein.

What exactly are "the Epstein files"?

The phrase does not refer to a single document dump or a neatly organized archive. Instead, it encompasses multiple categories of material gathered across years of



investigations and lawsuits:

- Flight logs to his island from Epstein's private aircraft
- Contact lists and appointment books seized from his properties
- Digital evidence recovered from computers and storage devices
- Depositions and exhibits from civil lawsuits
- Grand jury materials from federal and state investigations
- Evidence introduced during the prosecution of Jeffrey's accomplice, Ghislaine Maxwell

While some of this material has been released through court orders, much remains sealed or heavily redacted. What has emerged publicly paints a picture not just of Epstein's movements, but of his social ecosystem - one that included politicians, billionaires, royalty, academics, and celebrities.

Names, proximity, and the problem of implication

Few aspects of the Epstein files have drawn more attention than the appearance of famous names. Flight logs, photographs, and testimony have confirmed that Epstein socialized widely among the global elite.

However, association alone cannot be a proof of guilt. Amongst the most scrutinized figures is Donald Trump. Trump and Epstein were publicly acquainted in the 1990s and early 2000s, appearing at the same social events in Palm Beach and New York. Trump once described Epstein as a "terrific guy" in a magazine profile, a remark, he later distanced himself from. Trump's name appears in some Epstein-related materials, largely as part of social context.

Importantly, no court filing or criminal charge has accused Trump of participating in Epstein's trafficking operation. Federal investigators have stated that the released records do not establish new evidence of criminal conduct by Trump or most others named in the files. Yet the public reaction illustrates a deeper issue: when elite circles overlap with criminal behavior, even innocent associations become suspect.

The "client list"

One persistent claim surrounding the Epstein files is the existence of a secret "client list" - a ledger proving a vast conspiracy of powerful men who purchased access to minors. Despite repeated investigations, the Department of Justice and FBI have said no such definitive list has been found. This absence has fueled mistrust.

To some, it confirms a cover-up; to others, it underscores how crimes like Epstein's are structured to be informal, private, and intentionally undocumented. Abuse did not require invoices or contracts; it relied on discretion, intimidation, and the assumption that victims would not be believed. The files show patterns. Recurring locations, consistent recruitment methods, and a small inner circle that enabled access. That may be less satisfying than smoking gun. But, it is often how real-world exploitation operates.

Transparency versus harm

The push to unseal Epstein-related records has placed courts in an uncomfortable position. On one hand, transparency is essential for public trust and accountability. On the other, reckless disclosure risks retraumatizing survivors, exposing private individuals, and contaminating legitimate investigations. Judges have repeatedly emphasized that redaction is not protection for the powerful, but for victims. Still, delayed releases and blacked-out pages have contributed to public cynicism.

In an era already skeptical of institutions, the Epstein files became a Rorschach test for beliefs about power and justice. What the files ultimately tell us After years of reporting, litigation, and partial disclosure, the Epstein files have clarified several truths:

- Epstein's abuse was systematic and long-standing
- It was enabled by money, mobility, and social legitimacy
- Institutions failed victims repeatedly through delay, deference, and plea bargaining
- High-profile associations create moral suspicion, even when legal guilt is unproven

What they have not delivered is universal closure. Many survivors still seek acknowledgment. Many questions about enablers remain unresolved. And many Americans remain convinced that justice stopped where influence began.

A conclusion that lingers

The Epstein files are unsettling. Not because they reveal a single monstrous figure, but, because they expose how easily monstrosity can hide in plain sight when surrounded by prestige and privilege. They challenge the comforting belief that crimes of this magnitude must leave obvious trails, or that power inevitably attracts scrutiny. If the files provoke anger, that anger should be directed not only at the Epstein, but at the systems that enabled and allowed him to operate for decades.

Transparency must be paired with thoroughness. Accountability must extend beyond those who can be easily prosecuted. Mainly, survivors must never again be treated as collateral damage in the preservation of reputation. The files may not even tell us everything. But they ask an unavoidable question: how many crimes go unchallenged because the people involved are too important to offend? That question, unlike the criminal himself, remains very much alive.

# Democracy Under Verification: ‘The SIR Exercise in Tamil Nadu Explained’

Electoral rolls are fundamental to a healthy democracy, ensuring that every eligible citizen can exercise the right to vote. To make the rolls more accurate and transparent, the Election Commission of India (ECI) introduced the Special Intensive Revision (SIR). In Tamil Nadu, this exercise is being implemented during the tenure of the DMK-led state government, drawing widespread attention from citizens, administrators, and political parties. The initiative has sparked discussions because of its scale, timing, and the impact it may have on voter inclusion.

What is SIR? The Special Intensive Revision (SIR) is a detailed, large-scale verification of electoral rolls undertaken by the ECI. It involves door-to-door visits by Booth Level Officers (BLOs) to collect updated voter information and cross-check existing records. The process identifies discrepancies such as duplicate entries, deceased voters, or voters who have shifted. It also ensures new eligible voters are added correctly. SIR strengthens the transparency and accuracy of the voter database.

SIR was introduced by the Election Commission of India as an advanced form of electoral roll revision. While routine revisions happen annually, SIR is more rigorous, data-heavy, and involves physical verification to eliminate large-scale inaccuracies. It is not introduced by any state government, but its implementation timeline varies across states as directed by the ECI.

Objectives of the SIR Survey

- To conduct thorough verification and update of voter details.
- To remove ineligible entries such as deceased or duplicate voters.
- To add new voters, especially those turning 18.
- To collect additional demographic details for database accuracy.
- To strengthen electoral transparency and reduce malpractice risks.

Benefits of SIR

1. Cleaner and More Accurate Voter Rolls: The revision removes outdated entries and ensures correct data, enhancing credibility during elections.
2. Greater Inclusion of Eligible Voters: Door-to-door visits help identify citizens who were previously left out, particularly in low awareness areas.
3. Stronger Democratic Processes: A reliable voter list increases trust and reduces chances of impersonation or bogus voting.
4. Modernised Digital Records: Collecting updated photographs, mobile numbers, and EPIC details supports future digital integration.
5. Transparent Verification: Since the process is monitored and data-driven, it adds accountability and reduces manipulation.

Drawbacks of SIR

1. Low Public Awareness: Many people are unsure why the forms are being collected, leading to confusion and hesitation.
2. Risk of Genuine Voters: Being Left Out Marginalised communities, elderly individuals, and migrants may fail to submit forms, leading to unintended deletion.
3. High Workload on Field Staff: Teachers, anganwadi staff, and BLOs face heavy workloads, impacting their primary duties.
4. Inconsistencies in Implementation: In some places BLOs visit homes, while in others citizens must submit forms at camps, causing irregularities.
5. Concerns About Data: Privacy Public concern exists over how the additional personal information will be stored and secured.

Political and Public Concerns in Tamil Nadu

As the SIR process is being conducted during the DMK government’s period, it has become a topic of political debate. Some opposition parties have raised concerns that the large-scale revision, especially close to upcoming elections, could affect certain voter groups if errors occur. The state government, on the other hand, has assured full cooperation with the ECI to ensure no eligible voter is removed. These discussions reflect the need for transparency and consistent monitoring during the implementation phase.

What Can Be Done Further?

1. More Awareness Drives Clear, multilingual campaigns can help citizens understand why SIR is important and how to fill the forms correctly.
2. User-Friendly Form Design: Simplifying instructions and making forms easier to understand can reduce errors.
3. Strengthening Digital Submission Options: Allowing people to verify and submit details online would increase convenience and accuracy.
4. More Training for BLOs: Better training, digital tools, and support teams would help field workers manage the workload efficiently.
5. Safeguards Against Wrong Deletion: Strong cross-verification should ensure that no eligible voter is removed due to minor mistakes or missed submissions.
6. Improved Grievance Redressal: Helplines, verification counters, and correction camps can help citizens rectify errors quickly.

Final thoughts

The Election Commission has released the draft electoral roll for Tamil Nadu, and the final stage of revision work is currently underway. This opportunity has been provided for those whose names have been left out and for people seeking corrections such as change of address. After these activities, which will take place for one month until January 18, the complete electoral roll will be published.

The Special Intensive Revision (SIR) is an important step toward creating a more accurate and trustworthy electoral roll. While it is being implemented in Tamil Nadu under the DMK led government, the initiative itself belongs to the Election Commission of India. Its success depends on effective communication, proper training, and ensuring citizens feel confident and informed. If implemented carefully, SIR can significantly strengthen the democratic process by ensuring that every eligible voice is counted - and counted correctly.


கழகப் பொதுச் செயலாளர்
புரட்சித்தமிழர்
அண்ணன்
எடப்பாடியார்
அவர்களின் வாழ்த்துகளுடன்
அனைவருக்கும்
2026
இனிய
புத்தாண்டு
மற்றும்
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
கொட்டிவாக்கம் A.கிருஷ்ணமூர்த்தி Ex.Mc
பகுதி கழக செயலாளர்

THAKKAAR KURAL, English & Tamil Monthly, PRGI Registration No: TNBIL/25/A2396




Published by S Esuf Basha, Printed Ali Mohamed Sayeed, Published at No.4, Pandiyan Street, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041, Printed at J.M.Process No.29, V.N.Dass Road , Border Thottam, Mount Road, Chennai-600002, Editor. S.Esuf Basha